1973 மார்ச் 21]

பாலைக் கறந்துவிட்டு பிறகு மாடுகளைப் பற்றிவிட்டு விடுகிறார்களே, அதேபோல் முதலாளிகள் இந்தத் தொழிலாளிகளை அப்படி அனுப்பிவிடுகிறார்கள். அந் நிலையை மாற்றியமைத்து அந்தத் தொழிலாளிகள் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கும் விதத்தில் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பொத்தாம் பொதுவாகச் சொல்லாமல் குறிப்பிட்ட இடத்தில் இப்படி நடைபெறுகிறது என்று தெரிவித்தால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 453. **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரிப்பேட்டைத் துணை வட்டம், இலச்சிவாக்கம் அரிசனக் காலனியில் வீட்டு மனை இன்றி இருக்கும் ஏழை அரிசனங்களுக்கு வீட்டு மனை ஆர்ஜிதம் செய்து தருவதில் ஏற்படும் தாமதத்திற்குக் காரணங்கள் யாவை?

(இ) இவ்வேலை எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) நில உரிமை பெறும் மத்திய அரசு சட்டத்தின், பிரிவு 6-ன்கீழ் விளம்பர வரைவு ஏற்கப் பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவாவது அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்குச் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நலத்துறை இயக்குநர் அவர்கள் அரசிடம் நிதிப் பற்றாக்குறை காரணமாக கூடுதலான தொகை கேட்டிருக்கிறார்கள். 15 லட்சம் ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அதைக் கொடுத்துவிட்ட பிறகு நிச்சயமாகப் பட்டா வழங்கப்படும்.

* 454. **வினா—திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுகா சூரப்பள்ளி கிராமத்தில் குப்பம்பட்டி அரிசனச் சேரியை மாற்றுவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் வேறு யாராவது ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா?